TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8074792

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம்: நாகப்பட்டினம் PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம் Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 07/2021 Date நாள்: 05.08.2021

2. (i) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 120(B), 167, 409, 468,
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 471 IPC r/w. 109 IPC,
   (iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c) of PC Act, 1988 and sec. 13(2) r/w 13(1)(a) of PC (Amendment) Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்: —x—

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 2016 ஆம் ஆண்டு முதல் Date to நாள் வரை: 2020 ஆண்டு வரை
   Time Period நேர அளவு: Time from நேரம் முதல்: Time to நேரம் வரை:
   (b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 05.08.2021 Time நேரம்: 16.00 Hours
   (c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 05.08.2021 Time நேரம்: 16.00 Hours

4. Type of Information: Written/ Oral: தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக: கண்காணிப்பு அறிக்கையின் பேரில் the commissioner of Rural Development and panchayat raj, Chennai அவர்களின் ஒப்புதல் இணைப்பின்படி பதிவு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: 50 Km வடக்கு
   Beat Number: முறைக் காவல் எண்: (b) Address முகவரி: செம்பனார்கோயில் ஒன்றியம் ஆ.சபாதி, மேமாத்தூர் மற்றும் கீழ்மாத்தூர் ஊராட்சிகள்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S: District:
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: G. ரமேஷ்குமார் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: K. கணேசன்
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு: 1976 (d) Nationality நாட்டினம்: இந்தியா (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:
   Date of Issue வழங்கப்பட்ட நாள்: Place of Issue வழங்கப்பட்ட இடம்:
   (f) Occupation தொழில்: காவல் ஆய்வாளர் (g) Address முகவரி: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்): (1) Tr. M.S. அருண், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) செம்பனார்கோயில், (2) Tr. S. தியாகராஜன், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) செம்பனார்கோயில், (3) Tr. R. தியாகு, ~~[illegible]~~ வட்டார வளர்ச்சி அலுவலக உதவி பொறியாளர், செம்பனார்கோயில், (4) Tr. K. விஜயன், இளநிலை பொறியாளர், செம்பனார்கோயில், (5) Tr. S. ஆனந்தன், மேற்பார்வையாளர், முன்னாள் ஒ.வ.அ.அலுவலகம், செம்பனார்கோயில், (6) Tmt. A. கவிதா, செயலர், ஒன்றிய பணி மேற்பார்வையாளர், செம்பனார்கோயில் ஒன்றிய (7) Tmt. V. ராஜலட்சுமி, ஒன்றிய பணி மேற்பார்வையாளர், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்: இரகசிய விசாரணை செய்து ஒப்புதல் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

* GCP-240-34(Type-2) 90,000 Cps. 21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது** :- நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் இன்று **05.08.2021** ஆம் தேதி மாலை **16.00** மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் ஆகிய நான் நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா **செம்பனார்கோயில் ஒன்றியம், ஆறுபாதி, மேமாத்தூர் மற்றும் கீழ்மாத்தூர்** ஆகிய ஊராட்சிகளில் **PMAY(G)** திட்டத்தில் **2016-2017** ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை வீடுகள் கட்டப்பட்டதில் உள்ள முறைகேடுகள் தொடர்பாக இரகசிய விசாரணை செய்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு கண்காணிப்பு அறிக்கை அனுப்பியதன் அடிப்படையில், **எதிரிகள் 1 முதல் 7** வரையிலானவர்களின் மீது வழக்கு பதிவு செய்ய வழங்கப்பட்ட **the Commissioner of Rural Development and Panchayat Raj, Chennai அவர்களின் செயல்முறைகள் ஆணை எண் Roc.No.23530/2021/VCII-2,** நாள் **03.05.2021-ல்** கண்ட **ஒப்புதல் ஆணை** மற்றும் **சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குனரக குறிப்பாணை எண் VR.No.796/2021/RDP/NP,**

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 5.8.2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 5.8.21
Ins. V&AC, NP

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.08.2021 | 16.30 Hrs.

Name: பெயர் G. இரமேஷ்(பொ)
Rank: நிலை காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். No. எண்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி** :-

**நாள் 28.07.2021-ல்** அளிக்கப்பட்டுள்ள வழிக்காட்டுதல் மற்றும் அறிவுரைகளின் பேரில் வழக்குபதிவு செய்த விபரம் பின்வருமாறு :-

**எதிரி-1 திரு.M.S.அருண்,** கண்காணிப்பாளர், உதவி இயக்குநர்(தணிக்கை) அலுவலகம், மயிலாடுதுறை, மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) ஆக 01.06.2018 ஆம் தேதி முதல் 20.09.2019 ஆம் தேதி வரை பணிபுரிந்துள்ளார்.

**எதிரி-2 திரு.S.தியாகராஜன்,** கண்காணிப்பாளர், இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை) அலுவலகம், மயிலாடுதுறை, மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) ஆக 23.05.2017 ஆம் தேதி முதல் 01.06.2018 ஆம் தேதி வரை பணிபுரிந்துள்ளார்.

**எதிரி-3 திரு.R.தியாகு** என்பவர் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உதவி பொறியாளராக 03.10.2018 ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறார்.

**எதிரி-4 திரு.K.விஜயன்** என்பவர் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக 12.04.2018 ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறார்.

**எதிரி-5 திரு.S.ஆனந்தன்,** உதவி பொறியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம் என்பவர் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உதவி பொறியாளராக 20.09.2016 ஆம் தேதி முதல் 19.09.2018 ஆம் தேதி வரை பணிபுரிந்துள்ளார்.

**எதிரி-6 திருமதி.G.தமிழ்ச்செல்வி** என்பவர் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய பணிமேற்பார்வையாளராக 06.10.2017 ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறார்.

**எதிரி-7 திருமதி.V.ராஜலெட்சுமி** என்பவர் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய பணிமேற்பார்வையாளராக 07.09.2016 ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறார்.

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சியில் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா(கிராமின்) (**P**radhan **M**antri **A**was **Y**ojana(**G**ramin)-**PMAY(G)**) என்ற அனைவருக்கும் வீடு வழங்கும் PMAY(G) திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்பட்ட காலத்தில் பணிபுரிந்த மேலே கண்ட எதிரிகள் 1 முதல் 7 வரையிலானவர்கள், ஊழல் தடுப்புச் சட்டம், 1988 மற்றும் ஊழல் தடுப்புச்(Amendment) சட்டம் 2018 ஆகியவற்றின் சட்ட பிரிவு 2(c)-ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா(கிராமின்) என்ற திட்டத்தில் கீழ்கண்ட வழிகாட்டு நெறிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா(கிராமின்) (**P**radhan **M**antri **A**was **Y**ojana (**G**ramin)-**PMAY(G)**) என்ற அனைவருக்கும் வீடு வழங்கும் PMAY(G) திட்டத்தின்கீழ் சமூக பொருளாதார சாதிவாரியான கணக்கெடுப்பு(SECC) பட்டியலில் உள்ள மற்றும் வருடவருமானம் 3,00,000/-த்திற்கும் குறைவான, மாடிவீடுகள் இல்லாதவர்களுக்கு மாடிவீடு கட்டுவதற்கு ரூபாய் 1,70,000/- மானியமாக வழங்கப்படும். அதாவது இத்திட்டத்தில் மத்திய அரசின் 60 % பங்கு தொகை ரூபாய் 72,000/-, மாநில அரசின் 40 % பங்கு தொகை ரூபாய் 48,000/- மற்றும் மாநில அரசின் RCC Roofing தொகை ரூபாய் 50,000/- ஆக கூடுதல் ரூபாய் 1,70,000/- நான்கு தவணைகளாக சிமெண்ட், கம்பி, கதவு, ஜன்னல் ஆகியவற்றிற்குண்டான தொகையை கழித்தது போக மீதத்தொகை பயனாளிகளுக்கு வழங்கப்படும். பயனாளிகள் மூலமாக கட்டப்படும் வீடானது சுமார் 270 சதுர அடிக்கு குறையாமல் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் நில உரிமை பட்டா வைத்திருக்க வேண்டும், ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் மற்றும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். PMAY(G) திட்டத்தின்கீழ் பயனாளிகளின் பட்டா உள்ளிட்ட ஆவணங்களை ஊராட்சிமன்ற எழுத்தர்/செயலரால் பெறப்பட்டு மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலரால் சரிபார்க்கப்பட்டு பயனாளிகளின் விபரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அதன் பின்னர் ஒன்றிய பணிமேற்பார்வையாளர்கள் தொடர்புடைய இடத்தினை களஆய்வு செய்து சரிபார்த்து தங்களது கைபேசி மூலம் தொடர்புடைய இணையதளத்தில் பதிவு செய்தபின்னர், தொடர்புடைய பயனாளிக்கு மேற்படி PMAY(G) திட்டத்தின்கீழ் E-Sanction செய்யப்பட்டு, தொடர்புடைய பயனாளிக்கு PMAY(G) இணையதளத்தில் வேலை உத்தரவு சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்களால் வழங்கப்படும். PMAY(G) திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளை சம்மந்தப்பட்ட ஒன்றிய பணிமேற்பார்வையாளர் மற்றும் ஒன்றிய உதவி பொறியாளர் அவ்வப்போது பார்வையிட்டு, Basement, Lindal, Roof, Plastering ஆகிய நான்கு நிலைகளில் அளவீடு செய்து, நான்கு நிலை முடிந்தபின்னர் ஒவ்வொரு முறையும் வீடு கட்டுமானத்தின் நிலை குறித்து உண்மைத் தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு பயனாளிகளை வைத்து புகைப்படம் எடுத்து, ஒவ்வொரு நிலையிலும் சம்மந்தப்பட்ட

வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவர்களுக்கு அறிக்கை சமர்பிக்கவேண்டும். சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அறிக்கையை பெற்று பயனாளிகளின் வீடுகளை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு உண்டான நான்கு தவணை தொகையை ஒவ்வொரு நிலையிலும் தனித்தனியாக இணையதளம் மூலமாக அனுமதி அளித்து, பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு தவணை தொகைகள் அனுப்பப்படும். அதன் அடிப்படையில் பயனாளிகள் தங்களது தவணை தொகைகளை வங்கி கணக்கிலிருந்து பெற்றுக்கொள்வார்கள். சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அவருடைய வரம்பிற்கு உட்பட்ட PMAY(G) திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகள் அனைத்தையும் ஒவ்வொரு நிலையிலும் ஒருமுறையாவது கட்டாயம் பார்வையிடவேண்டும் என்பது போன்ற வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சியில் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை PMAY(G) திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 1)காந்திமதி கலியபெருமாள், காலனிதெரு, வாழ்க்கை, மேமாத்தூர், 2)சுதா கலியபெருமாள், மேலத்தெரு, கேணிக்கரை, மேமாத்தூர், 3)நடராஜன் கோவிந்தசாமி, புதுத்தெரு, மேமாத்தூா, 4)தியாகராஜன் சித்ரா, குருஸ்தானம், மேமாத்தூர் மற்றும் 5)சுரேஷ் சுவேதா, மேமாத்தூர் ஆகிய நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகள் 2020 ஆம் ஆண்டுவரை வீடுகள் கட்டாமல், கட்டி முடிக்கப்பட்டதாக மேலே கண்ட எதிரிகள் 1, 2, 3, 5, 6 ஆகியோர் குற்றமுறு சதிசெயலில் ஈடுபட்டு தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அரசு பணம் சம்மந்தப்பட்ட பணியினை, நேர்மையற்ற முறையில், ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மோசடி செய்தும், பொய்யான ஆவணங்களை தயார் செய்தும், பொய்யான ஆவணங்கள் என்று தெரிந்தே உண்மையான ஆவணமாக பயன்படுத்தி அந்த போலி ஆவணங்களின்மூலம் மேற்படி 5 நபர்களுக்கும் சுமார் 8,50,000/- ரூபாய் வழங்கியதாக முறைகேடு செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.

மேலும், மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சியில் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை PMAY(G) திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பயனாளிகளில் 13-க்கும் மேற்பட்ட நபர்களின் வீடுகள் 2020 ஆம் ஆண்டுவரை வீடுகள் கட்ட ஆரம்பிக்கப்படாமல் இருந்தும், அரசு நிதியினை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு Base level மற்றும் Lindal level-க்கு உண்டான தொகை சுமார் 4,98,667/- ரூபாயை அனுமதித்து(sanctioned) மீளப்பெறாமல் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியும் மற்றும் 15-க்கும் மேற்பட்ட வீடுகள் 2020 ஆம் ஆண்டுவரை குறிப்பிட்ட நிலையில் வீடுகள் கட்டி முடிக்காமல் அடுத்தடுத்த நிலைகளுக்குண்டான அரசு நிதியினை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு சுமார் 13,85,412/- ரூபாயை அனுமதித்து (sanctioned) அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியும், மேலே கண்ட எதிரிகள் 1 முதல் 7 வரையிலானவர்கள் குற்றமுறு சதிசெயலில் ஈடுபட்டு தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அரசு பணம் சம்மந்தப்பட்ட

பணியினை, நேர்மையற்ற முறையில், ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மோசடி செய்தும், பொய்யான ஆவணங்களை தயார் செய்தும், பொய்யான ஆவணங்கள் என்று தெரிந்தே உண்மையான ஆவணமாக பயன்படுத்தி அந்த போலி ஆவணங்களின்மூலம் முறைகேடு செய்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஆகவே, மேற்சொன்ன எதிரிகளின் செய்கை குற்ற விசாரணைக்கு உட்படுத்த போதிய முகாந்திரம் இருப்பதால், மேற்கண்ட எதிரிகள் **1** முதல் **7** வரையிலானவர்களின்மீது நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். **7/2021**, சட்ட பிரிவுகள் 120(B), 167, 409, 468, 471 r/w.109 IPC, சட்ட பிரிவு 13(2) r/w.13(1)(c) Prevention of Corruption Act, 1988, **மற்றும்** சட்ட பிரிவு 13(2) r/w.13(1)(a) Prevention of Corruption(Amendment) Act, 2018-ன்படி இன்று **05.08.2021** ஆம் தேதி மாலை **16.00** மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

(க.இரமேஷ் குமார்) 5.8.2021
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசலினை, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் / சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு அனுப்பியும், நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

(க.இரமேஷ் குமார்) 05.08.2021
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.